1992 மார்ச் 25]

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரப்பப் பட்டது என்று சொன்னார்கள். உண்மையிலேயே நிரப்பப் பட்டுவிட்டது. மகிழ்ச்சியடைகின்றோம். அதே சமயத்தில் அது இன்னும் இயக்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச் சர் அறிவாரா ? அங்கே ஏற்கெனவே ஒரு ரேடியோகிராபரை போட்டாலும், ஒரு டாக்டரையும், அசிஸ்டெண்டையும் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, அது இன்னும் சரி யாக இயங்காமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து உடனடியாக இயக்க வைக்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியிலே இந்தப் பணியிடம் நிரப்பப் படுமா என்று கேட்ட காரணத்தினால் நிரப்பப்பட்டது என்று சொன்னேன். இதுவரை அந்த எக்ஸ்ரே மெஷின் இயங்காமல் இருக்கிறது என்கிற தகவல் இப்பொழுது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். எனவே, நான் அன்றைக்கு மானியக் கோரிக்கையின்போது கூட சொன்னேன். சின்னச் சின்ன கருவி கள் கூட அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்றன. ஏறத்தாழ 1,703 மருத்துவமனைகள் இன்றைக்கு இருக்கின்றன. எல்லா இடங்களிலேயும் பல கருவிகளை நாம் வைத்திருக்கிறோம். அவைகள் சில நேரங்களில் இயங்காமல் போய்விடுகிற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. எனவே, நீங்கள் இங்கே சொன்ன கருத்தை வைத்து, அதனை ஆதாரமாக எடுத்து, அதை இயக்கு வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 344, திரு. தி. சாத்தையா. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

344—

வனத்துறை ஊழியர்களின் அடிப்படை ஊதியம்

*5291 திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வனத்துறையில் பணிபுரியும் பாரஸ்டர்களுக்கும், ரேஞ் சர்களுக்கும் கல்வித் தகுதியும், பயிற்சியும் (டிரெயினிங்) ஒரே மாதிரியாக இருக்கும் பொழுது அடிப்படை ஊதியம் ரூ. 600 வேறுபாடு உள்ள நிலையை மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

[1992 மார்ச் 25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரேஞ்சர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதி பயிற்சி மற்றும் பணிப்பொறுப்புகள் பாரஸ்டர்களைவிட உயர்ந்ததாக உள்ளதாலும், ரேஞ்சர்கள் பதவியிடம் பாரஸ்டர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் நியமிக்கப்படுவதாலும், ரேஞ்சர்களுக்கு பாரஸ்டர்களைக் காட்டிலும் அதிக ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, ஒரே மாதிரியான ஊதியம் வழங்கும் நிலை எழவில்லை.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாரஸ்டர்களுக்கும், ரேஞ்சர்களுக்கும் அடிப்படைக்கல்வித் தகுதியும், பயிற்சித் தகுதியும் ஒரே நிலையில் இருக்கும்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் மட்டும் ஏன் வித்தியாசம் இருக்க வேண்டும்? இப்போது ரேஞ்சர்களுக்கு 2,000 ரூபாயாகவும், பாரஸ்டர்களுக்கு 1,400 ரூபாயாகவும் ஊதியம் இருக்கிறது. இந்த ரேஞ்சர்கள் பயிற்சி முடிந்தவுடன் நிர்வாகப் பிரிவுக்குப் போகிறார்கள். ஆனால், இந்த பாரஸ்டர்கள் பயிற்சி முடிந்தவுடன் பீல்ட் ஒர்க்குக்குப் போகிறார்கள். இப்படி பாரஸ்டர்கள் பீல்ட் ஒர்க்குக்குப் போவதால் அவர்கள் நிறைய ரிஸ்குகளை எடுத்துப் பணியாற்றுகிறார்கள். ஆகவே, இந்த ஊதிய வேறுபாடுகளைக் களைந்து, அவர்களை ஊக்குவித்து, ஒரே சீரான ஊதியத்தையும், அந்தஸ்தையும் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருப்பது ரேஞ்சர்களுக்கும், பாரஸ்டர்களுக்கும் இருக்கிற வித்தியாசம். ரேஞ்சர்கள் ஆற்றும் பணி வேறு, பாரஸ்டர்கள் ஆற்றும் பணி வேறு. ரேஞ்சர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஏரியா என்பது ஒரு குறிப்பிட்ட வரையறையில் வகுக்கப்பட்டிருக்கிறது. பாரஸ்டர்களுக்கும் அதுபோல வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பாரஸ்டர்களாக இருக்கிறவர்கள்தான் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ரேஞ்சர்களாகப் பதவி உயர்வு பெறுகிற காரணத்தால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையில் உள்ள ரேஞ்சரும், பாரஸ்டரும் காவல் துறையில் உள்ள இன்ஸ்பெக்டருக்கும், சப்-இன்ஸ்பெக்டருக்கும் சமம். இரண்டும் கிட்டத்தட்ட ஒரே அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், ரேஞ்சர்கள் ட்ரெயினிங்

1992 மார்ச் 25]

முடித்தவுடன் அவர்களுக்கு 2,000 ரூபாய் அடிப்படைச் சம்பள மாகவும், பாரஸ்டர்கள் ட்ரெயினிங் முடித்தால் அவர்களுக்கு 1,400 ரூபாய் அடிப்படைச் சம்பளமாகவும் பிக்ஸ் பண்ணு கிறார்கள். ஆனால், காவல் துறையில் பர்ஸ்ட் அப்பாயின்ட் மென்ட் எஸ்.ஐ.ஆக இருந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துறையில் இருக் கக்கூடிய இரண்டு பதவிகளுக்குரிய வித்தியாசத்தைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். இன்னொரு துறையோடு சேர்த்து, ஒப்பிட்டால் பதில் கொடுக்க முடியாது. அது பே கமிஷனில் சொல்ல வேண்டிய ஒன்று. கேள்வி நேரத்திலே இது வராது. இது தொடர்பான கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைக் கேள்வி. ட்ரெயினிங் எல் லாம் ஈக்குவலாக இருக்கும்போது. அவர்கள் ட்ரெயினிங் முடித்தவுடன்—ரேஞ்சர்களானாலும் சரி. பாரஸ்டர்களானாலும் சரி— அவர்கள் முதலிலே பீல்ட் ஒர்க் என்று 3 வருடங்களோ அல்லது 10 வருடங்களோ செய்துவிட்டு, அதன் பிறகு அட் மினிஸ்ட்ரேடிவ் சைடில் உள்ள ரேஞ்சர் பொசிஷனை அவர் களுக்கு கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன், மேலும் அவர்களுடைய சம்பள வீதத்தையும் சரிப்படுத்தி, சீராக அமைத்து, அவர்களை ஊக்குவித்தால், பீல்ட் ஒர்க் பண்ணும் பாரஸ்டர்களுக்கு ஊக்கமேற்பட்டு, காடுகளைப் பாதுகாக்க வசதியாக இருக்குமென்று கூறி, இதில் ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு வதுபோல கல்வித் தகுதியை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு வருக்கும் சம்பளத்தைக் கொடுக்க முடியாது. காரணம் ஒருவர் ஒரு இடத்திலே கிளார்க்காகப் பணியாற்றலாம், இன்னொரு வருக்கு மேலிடத்திலே வருவதற்கு வாய்ப்பு கிடைக்கலாம், இப்போது ரேஞ்சர்களை குறிப்பிட்ட அளவுக்குத்தான் பணியிலே அமர்த்த முடியுமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல பாரஸ்டர்கள் அத்தனை பேரையும் ரேஞ்சர் களாக்க முடியாது, அந்த அளவுக்கு வேலை வாய்ப்பு இல்லை, உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு துறையைப் பற்றிக் குறிப்பிட் டார்கள், அந்தத் துறைக்கும் இந்தத் துறைக்கும் வித்தியாசம் இருக்கிறது, ஒவ்வொரு துறைக்கும் பே கமிஷனில் இவ்வளவு சம்பளம் வழங்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இதை எல்லாம் கருத்திற் கொண்டு ரேஞ்சர்கள் வேறு. பாரஸ்டர்கள் வேறு என்று பிரிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் பாரஸ்டர் களாக பணியாற்றுவதற்கு அவர்கள் வருகிற காரணத்தாலே

தான் அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்த வித்தியாசம் இருக்கத் தான் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்,

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாத்தையா அவர்கள் குறிப்பிட்டதுபோல பாரஸ்டர்களும், ரேஞ்சர்களும் தனித் தனியாக ரெக்ரூட் செய்யப்படுகிறார்களா? காவல் துறையிலே எஸ்.ஐ. மட்டும்தான் ரெக்ரூட் செய்யப்படுகிறார்கள், இன்ஸ்பெக்டர் ரெக்ரூட்மென்ட் கிடையாது, அவர்கள் பதவி உயர்வு பெறுகிறபோது, அந்தப் பாகுபாடு தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் இதற்கும். தொடர்பில்லை என்னும்போது நீங்கள் அதிலே விளக்கத்திற்குப் போனால் எப்படி? அமைச்சரவர்களே, அது தொடர்பில்லை என்று சொல்லிவிட்டார்கள், நீங்கள் எஸ்.ஐ. ஆக இருந்தவர் தான், அதை நியாயப்படுத்த இது நேரமில்லை. இந்த வினாவில் நீங்கள் துணை வினாக் கேட்கலாம்,

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பி,எஸ்சி, (பாடனி). எம்,எஸ்சி, (பாடனி) படித்தவர்கள் பாரஸ்டர்களாக, ரேஞ்சர்களாக ரெக்ரூட் செய்யப்படுகிற காரணத்தால் சம்பள வித்தியாசம் தெரிகிறது. எனவே பாரஸ்டர் ரெக்ரூட்மென்டை மட்டும் வைத்துக் கொண்டு, ரேஞ்சர்கள் ரெக்ரூட்மென்டை நிறுத்தி. தகுதியானவர்கள், க்ளீன் ரிக்கார்ட் வைத்திருக்கிற பாரஸ்டர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதோடு, ப்ரமோஷன் ஸ்கோப்பையும் அதிகரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பாரஸ்டர்களிலிருந்து ரேஞ்சர்களாகப் பதவி உயர்வு தர வேண்டும்; ரேஞ்சர்களை நேரடியாகத் தேர்வு செய்யக்கூடாது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கோரிக்கையை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கும் வகையில் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS